

ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் கொந்தளம் ஊராட்சியில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.18.5இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடத்தில் சமையல் அறை அமைப்பதற்கான பணிகளை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தற்காலிகமாக

# 881 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் !

## அமைச்சர் கோவி.செழியன் தகவல்!

*சென்னை, செப்.25-*

*மாணாக்கர்களின் கல்வி சேவையில் எவ்வித பாதிப்பும் இல்லாத வகையில் 2025-26ஆம் கல்வியாண்டில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியி யல் கல்லூரிகளில் மேலும் 881 கௌரவ விரிவுரையா ளர்கள் தற்காலிகமாக தெரிவு செய்ய நேற்று 24.09.2025 முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனை வர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-*

*உயர்கல்வியும், மருத்துவமும் தனது இருகண்களாக போற்றி இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக சிறப்பான ஆட்சியை நடத்தி வரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் "நான் முதல்வன்", "புதுமைப் பெண்", "தமிழ் புதல்வன்", "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை" போன்ற பல்வேறு முதன்மையான தனித்துவமான திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். உலகளவில் அனைத்து துறைகளிலும் நமது மாணாக்கர்கள் சிறந்து விளங்கவே இந்த சிறப்பான திட்டங்களை முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். அதனை, நம் மாணாக்கர்கள் முழுமையாக பயன்படுத்தி உலகளவில் சிறந்த திறன்மிக்க வர்களாக சாதனைகளை படைத்து வருகிறார்கள்.*

*முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 2025-26ஆம் கல்வியாண்டில் ஏழை எளிய மாணாக்கர்கள் உயர் கல்வியினை பெறவேண்டும் என்பதற்காக பாடப்பிரிவுகளில் 15,000க்கும் மேற்பட்ட கூடுதல் இடங்களும், புதிய*



*பாடப்பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஏழை எளிய மாணாக்கர்களின் உயர்கல்வித் தேவையினை பூர்த்தி செய்ய 15 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களில் உடனடியாக நிரந்தர ஆசிரியர்களை பணியமர்த்த இயலாத நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்த லுக்கிணங்க மாணாக்கர்களுக்கான கல்வி கற்ற லில் தொய்வு ஏற்படாமல் இருக்க ஏற்கனவே 574 இடங்களுக்கு தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள் தேர்வு செய்ய விளம்பரம் வெளியிடப்பட்டது அதில் 516 பேர் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள னர்.*

*இதன் தொடர்ச்சியாக, மேலும், 881 கௌ ரவ விரிவுரையாளர் களை தற்காலிகமாக பணியமர்த்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 38 பாடப்பிரிவுகளில், 881 தற்காலிக கௌரவ விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட வுள்ளது. இதுகுறித்த முழு விவரங்கள் www.tngasa.org என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இணைய தளம் வாயிலாக 24.09.2025 முதல் தகுதியுள்ள நபர்கள் தங்களது விண்ணப்பங் களை பதிவு செய்யலாம். விண்ணப்பங்கள் பதிவு செய்ய இறுதி நாள் 08.10.2025 ஆகும். மேலும், 21.07.2025 ஆம் செய்தி அறிவிப்பின்படி, ஏற்கனவே கௌரவ விரிவுரையாளர் பணிக்கு விண்ணப்பித்த வர்கள் தற்போது விண்ணப்பிக்கும் போது, தங்களின் விண்ணப்ப எண்களை பதிவு செய்து, விண்ணப்ப கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெறலாம்.*

*தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளைப் பின்பற்றியும், கல்வித்தகுதி மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பீடுகளின் அடிப்படையி லும் கௌரவ விரிவுரையாளர் கள் தெரிவு செய்யப்படுவர். தகுதியுள்ள நபர்கள் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.*



முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 25.9.2025 அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு – தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வதற்கான விழா அழைப்பிதழை ஹைதராபாத்தில், தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களிடம் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் சந்தித்து வழங்கினார்.

### 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சிக்கு வருகை தரும்

# தெலங்கானா முதல்வரை பாசத்துடன் வரவேற்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.25–

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" தமிழ் நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் – "புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன்" திட்டங்களின் 2025 - 26 கல்வி ஆண்டிற்கான தொடக்க விழா குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**கல்வியே நமது இனத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படை எனச் செயலாற்றி வரும் நமது திராவிட மாடல் அரசு, நாளை நடத்தவுள்ள கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சிக்கு வருகை தரும் அன்புச் சகோதரர் - தெலங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களைப் பாசத்துடன் வரவேற்கிறோம்!**

**நமது அரசின் சாதனைத் திட்டங்களான புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் விரிவாக்கமும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாணவச் செல்வங்களின் முகங்களைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 217 வது நாள்!

## எழும்பூர் தெற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, செப். 25–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 217 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று



(24.09.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு. 2) வட்டம் 108 அ, அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இது தான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி,

வட்ட செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### 2 ஆவது கட்டமாக மதுரவாயல் தெற்குப் பகுதி

# 148 வது வார்டில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம்!

## வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் வேண்டுகோள்!

*சென்னை, செப். 25*

*மதுரவாயல் தெற்குப் பகுதி, 148 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, 148 வது வார்டில் 2 வது கட்டமாக, "உங்களுடன் ஸ்டாலின்" நிகழ்ச்சியில் 13 துறைகள், 43 சேவைகளைக் கொண்டு அதிகாரிகள் மனுக்களை பெறவுள்ளனர்.*

*கடந்த ஜூலை மாதம் 24 ஆம் தேதி நடைபெற்றதை தொடர்ந்து, இன்று (25.09.2025 வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு, 2 வது கட்டமாக மேட்டுக்குப்பம், என்.டி.பட்டேல் ரோடு, ஜி.எம். கோல்டன் மஹாலில் நடைபெறுகிறது.*

*எனவே பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுவீர் என மதுரவாயல் தெற்குப் பகுதி, 148 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியம் பென்னலூர்பேட்டை ஊராட்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 45 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து புதிய பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி. ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்றார். உடன் ஜான்(எ) பொன்னுசாமி, அப்துல்ரஷீத் நம்பாக்கம் வேணு நா.சீனிவாசலு, ராகவன், டி.வேல்முருகன், குருமூர்த்தி, ஏ.சீனிவாசன், ரஹீம், நாகபூஷனம், ஆர்.ரகு, குமரேசன், ஆர்.காண்டீபன், ஆர்.தில்லைகுமார், விஜயன், டி.ராமராவ், விஜயமாலா பாஸ்கர், பி. சிவய்யா, டி.ஆர்.கே.வாசு, என்.எம்.சுப்பரமணி, ஆர்.கஜேந்திரன்,டி.கே.பாபு சாய்குமார், பிரபாகரன், ரகு, ரங்கையன், பூபாலன், சுரேஷ், நளாயினி, டார்த்தி, வள்ளி, சித்ராபாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1ல் 11வது வார்டில் ராஜீவ் காந்தி நகர்,சபாபதி நகர்,காந்தி நகர், பகுதிகளில் மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி ஆய்வு செய்தார். உடன் உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், சுகாதார ஆய்வாளர் மாரிமுத்து,வட்டக் கழக செயலாளர் மாவட்ட,மாநகர, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகம் முன்னோடிகள் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம்

# தோட்டநாவல் - பொற்பந்தல் ஊராட்சி மன்றக் கட்டிடங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*காஞ்சிபுரம், செப். 25 -*

*காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலவாக்கம் அருகே உள்ள தோட்ட நாவல் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் மற்றும் அரசு பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம், பாலேஸ்வரம் ஊராட்சியில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் ஊராட்சி மன்ற கட்டிடம், மற்றும் மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.*

*இதனைத் தொடர்ந்து. காட்டாங்குளம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, அமராவதி பட்டினம் கிராமத்தில் நியாவிலை கடை, சிறுமையிலூர் ஊராட்சி மன்ற கட்டிடம், அங்கன்வாடி கட்டிடம், ஆனம்பாக்கம் ஊராட்சியில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, சிறுதாமூர் ஊராட்சி மன்ற கட்டிடம், பொற்பந்தல் ஊராட்சி மன்ற கட்டிடம், அங்கன்வாடி கட்டிடம், பேருந்து நிழற்குடை ஆகிய ஊராட்சிகளில் புதிய கட்டிடங்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ திறந்து வைத்தார்.*

*அருகில் ஒன்றிய செயலாளர் டி. குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாணிக்கவேல், சூர்யா, மாவட்ட கவுன்சிலர் சிவராமன், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்றத் தலைவர்கள்ஊராட்சி மன்ற தலைவர்கள் அமுதா தமிழ் வேந்தன்,*

*சுந்தரமூர்த்தி, செல்வக்குமார், மாதவன், கோமளா ஐயப்பன், கோதண்டராமன், கார்த்திகேயன், நிர்வாகிகள் ரவி, பாலமுருகன், கார்த்திக், கோபி, வெங்கட்ராமன், மணிகண்டன், ரத்தினமாலா, கவுன்சிலர்கள் கல்யாண சுந்தரம், சுப்பிரமணி, நதியா கோபி, அழகப்பன், முரளி, பாபு உள்ளிட்ட கிராம பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், வார்டு எண்.99க்குட்பட்ட பொதுமக்களுக்காக புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் 23.09.2025 அன்று நடைபெற்ற இரண்டாவது கட்ட "உங்களுடன் ஸ்டாலின்" முகாமைப் பார்வையிட்டு, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார்.



மதுரவாயல், சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி துணை செயலாளர் தீ.பாலாஜி, வட்ட கழக செயலாளர் எம்.ரூபன், மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.